**செ.கு.எண் :86** **நாள் : 02.11.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (2.11.2022) சென்னை, எழிலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.**

**கேள்வி** : வட சென்னையில் சில பகுதிகளில் தண்ணீர் தேங்கியிருப்பதாக உங்கள் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில்:** வந்திருக்கிறது. அதை அப்போதைக்கப்போது அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி:** போன முறை இல்லாத அளவுக்கு தண்ணீர் எங்கேயும் பெரிய அளவில் இல்லை.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில்:** நான் சொல்லக் கூடாது அதை, நீங்கள் சொல்கிறீர்கள்.

**கேள்வி** தி.நகர் போன்ற பகுதிகளில் தண்ணீர் இல்லை. சில இடங்களில் இருக்கிறது. அதையும் சரி செய்ய……

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில்:** அதிமுக ஆட்சியில் கடந்த பத்து ஆண்டு காலமாக சென்னையை மட்டுமல்ல, தமிழ்நாட்டையே சீரழித்து விட்டு சென்றிருக்கிறார்கள். அதை சரி செய்ய வேண்டுமென்றால், ரொம்ப வருஷம் ஆகும். இருந்தாலும் நாங்கள் ஒன்றரை வருடத்திற்குள் முடித்து விடுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in